பொதுச் செயலாளர் மேஜையிலிருந்து...

29 செப்டம்பர் 2013-ஆம் திகதி சிலாங்கூர், பண்டார் உத்தாமா ஓன் உத்தாமா ஒன் வேர்ல்ட் தங்கும் விடுதியில் நடைப்பெறவுள்ள ஜனநாயக செயல் கட்சியின் மத்திய செயலவை உறுப்பினர்கள் மறுத்தேர்தலுக்கு அனைத்து கட்சி கிளையின் பிரதிநிதிகள் மற்றும் மத்திய செயலவை உறுப்பினர்கள் கண்டிப்பாக வருகை புரிய வேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயக செயல் கட்சியை அழித்து விட வேண்டும் என்ற எண்ணத்தை பதிவக சங்கம் இன்னும் கைவிடவில்லை.

அம்னோவின் கைப்பாவையாக விளங்கும் சங்க பதிவகம், ஜனநாயக செயல் கட்சிக்கு எதிராக மேற்கொள்ளும் ஒவ்வொரு தவறான நடவடிக்கைக்கும் விழிப்பான நிலையில் ஜனநாயக செயல் கட்சி செயல்படும். கடந்த 13-வது பொதுத் தேர்தலில் ஜனநாயக செயல் கட்சி அடைந்த மாபெரும் வெற்றிக்கு பழிவாங்கும் அங்கமாக இந்த மறுத்தேர்தலில் தப்பான தோற்றம், கட்சி மற்றும் தலைவர்களின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும் செயலை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

என்ன நடந்தது என்று மறுப்படியும் நினைவுக்கூறுகிறேன். கடந்த 15 மற்றும் 16 டிசம்பர் 2012-ல் பினாங்கில் நடைப்பெற்ற தேசியப் பேரவையில் தேர்தல் அதிகாரியாக நியமனம் செய்த சகோதரர் பூ வெங் கியோங் மத்திய செயலவை உறுப்பினர்கள் தேர்தல் போது செய்த தவற்றை ஜனநாயக செயல் கட்சி தலைமைத்துவம் பொறுப்புணர்வுடன் ஏற்றுக்கொள்கிறது. அந்த தவற்றை கட்சிக்கு வெளியில் உள்ளவர்கள் அடையாளம் காணவில்லை. மாறாக, கட்சி உறுப்பினர்கள் அந்த தவற்றை அடையாளம் கண்டு ஜனநாயக செயல் கட்சி தலைமைத்துவம் எந்தவொரு ஒளிவு மறைவுமின்றி அந்த தவற்றை ஒப்புக்கொண்டு அந்த தவறு சரி செய்யப்பட்டுவிட்டது. அந்த முடிவை சர்வதேச கணக்கியல் நிறுவனம் மறு உறுதியும் செய்யப்பட்டுவிட்டது.

13-வது பொதுத் தேர்தல் வேட்பு மனு தாக்கல் முதல் நாள் அதாவது 20 ஏப்ரல் 2013-ம் நாளன்று சங்கப் பதிவகம் புதிய மத்திய செயலவை உறுப்பினர்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிவித்தது. இதனால், ஜனநாயக செயல் கட்சி வேட்பாளர்கள் ஜனநாயக செயல் கட்சியின் சின்னத்தை பயன்படுத்துவதற்கு வழங்கப்படும் பாரத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் கையொப்பமிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதற்கு பதிலாக அனைத்து ஜனநாயக செயல் கட்சி வேட்பாளர்களும் பாஸ் சின்னத்தை பயன்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. இந்த சங்கப் பதிவக முடிவை எதிர்த்து பொதுவில் பல எதிர்ப்புகள் கிடைத்ததும் சங்கப் பதிவகம் வேறு எந்த வழியும் இல்லாமல் ஜனநாயக செயல் கட்சியின் சின்னத்தை பயன்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியது.

பொதுத் தேர்தல் வரலாற்றில் ஜனநாயக செயல் கட்சி மாபெரும் வெற்றி பெற்றவுடன் அம்னோ சங்கப் பதிவகத்தை பயன்படுத்தி மறுத்தேர்தல் செய்யும் படி உத்தரவிடப்பட்டுள்ளது. சங்கப் பதிவகத்தின் முடிவை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆரம்பத்தில் கட்சியின் தலைமைத்துவம் முடிவு எடுத்தது.

நீதிமன்றத்தில் வெற்றிப் பெற முடியும் என்ற சூழ்நிலை இருந்தப் போதிலும் கட்சியின் தலைவர் கர்பால் சிங் அவர்களுக்கு சங்கப் பதிவகம் நீதிமன்றத்தை பயன்படுத்தி கட்சியின் பதிவை இரத்து செய்யப்போவதாக

சில தகவல்கள் கிடைக்கப்பெற்றன. சகோதரர் கர்பால் சிங் நீதிமன்றத்தில் வெற்றிப் பெற்றுவிடலாம் என்ற சூழ்நிலை இருந்தப்போதிலும் இந்த வழக்கு அரசியல் நோக்கம் கொண்டது.

அரசியல் நோக்கம் உள்ள இந்த நீதிமன்ற வழக்கில் கட்சியின் பதிவு இரத்து செய்யப்பட்டுவிட்டால் அது கட்சிக்கு மிக பெரிய பிரச்சனையை உண்டாக்கிவிடும். தலைவர்களின் சுதந்திரம் பரிக்கப்படாலாம் மற்றும் சிறையில் அடைக்கப்படலாம், ஆனால் ஜனநாயக செயல் கட்சியின் பதிவு எந்தக் காலத்திலும் இரத்து செய்யப்படாமல் பார்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

ஆகவே, இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டுதான் தலைமைத்துவம் எந்தவொரு தவறான காரியம் செய்யாமலிருந்தும் இந்த மறுத்தேர்தலுக்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் மாதத்தில் நடைப்பெற்ற பேரவையின் பொது பயன்படுத்த்ப்பட்ட அந்த வேட்பாளர்கள் பட்டியல்தான் மறுப்படியும் பயன்படுத்தப்படவுள்ளது. புதிய மற்றும் பழைய மத்திய செயலவை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றினைந்து கட்சியின் நலனுக்காக இந்த முடிவு எடுக்கப்பட்டது.

செர்டாங் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் ஓங் கியான் மிங் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். சர்வதேச கணக்கியல் நிறுவனமான பிகேஎப் இண்டெர்நெஷ்னல் இந்த சிறப்பு பேரவை ஆரம்பம் முதல் இறுதி வரை கண்காணிப்பதற்கு (வாக்குகள் கணக்கிடுதல்) நியமனம் செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் சட்டத்திட்டத்தில் சிறப்பு தேசிய பேரவை நடத்துவதற்கு வாய்ப்புள்ளது. மறுத்தேர்தல் செய்ய வேண்டும் என்று சங்கப் பதிவகத்துடன் சேர்ந்துக் கொண்டு ஜாலரா போட்ட சிலர் இன்று இந்த மறுத்தேர்தல் சட்டத்திற்கு புரம்பாக செய்யப்படுகிறது என்கின்றனர். இந்த மறுத்தேர்தலை எதிர்த்து அந்த சிலர் நீதிமன்றத்தில் வழக்கும் பதிவு செய்துள்ளனர். 25 செப்டம்பர் அன்று நீதிமன்றத்தில் இந்த வழக்கு நடைப்பெறவுள்ளது.

ஒருவேளை இந்த துரோகிகள் வெற்றிப் பெற்றுவிட்டால், இந்த சிறப்பு தேசிய பேரவை ஒத்தி வைக்கப்படும். இல்லையென்றால் திட்டமிட்டப்படி 29 செப்டம்பர் 2013-ல் சிறப்பு தேசிய பேரவை நடைப்பெறும். இருப்பினும் இந்த துரோகிகள் கட்சியை பழிவாங்குவதிலிருந்து பின்வாங்க மாட்டார்கள். ஆகவே, ஜனநாயக செயல் கட்சியை ஒழித்து விட வேண்டும் என்ற அந்த துரோகிகள் எண்ணத்தை நாம் ஒழிக்க வேண்டும் என்றால் பேராளர்கள் சிறப்பான வருகையை பதிவு செய்ய வேண்டும்.

கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்ப அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவு செய்து வரும் கட்சி இந்த ஜனநாயக செயல் கட்சி. ஆகவே, தேசிய முன்னணியை விட நாம் மிக சிறப்பாக ஆட்சி புரிய முடியும்.

மக்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை சுமந்துக் கொண்டிருக்கும் கட்சி இந்த ஜனநாயக செயல் கட்சி. ஆகவே, மலேசியர்களின் கனவுகளை நனவாக்கி ஒரு சிறந்த வாழ்க்கை முறையை கொண்டு வர முயற்சிக்கும் இந்த ஜனநாயக செயல் கட்சியிடம் அனைவரும் நியாயமாக நடந்துக்கொள்ள வேண்டும்.

வருகின்ற 29 செப்டம்பர் 2013-ல் நாம் அனைவரும் சிலாங்கூர், பண்டார் உத்தாமா ஓன் வேர்ல்ட் தங்கும் விடுதில் சந்திப்போம்!

லிம் குவான் எங்